மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். பேரவைத் தலைவருக்குத் தகவல் வந்தது. அது போல் தீர்மானம் கொடுக்கப்பட்டது. அதை 14 நாள் கழித்தே கூட உறுப்பினர்களுக்குச் சொல்லியிருக்கலாம். ஆனால், எவ்வளவு விரைவில் உறுப்பினர்களுக்கு அதைச் சொல்ல முடியுமோ அவ்வளவு விரைவில் சொல்லி விடுவது நல்லது என்று அந்த முறையில் சொல்லப்பட்டது. அடுத்த நிமிடமே அதை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று பேரவை தலைவருக்கு நோட்டீஸ் வந்து விட்டால், அதை உடனுக்குடன் அவைக்குச் சொல்லி விடுவதுதான் நல்லது, காத்திருக்கத் தேவையில்லை என்ற அடிப்படையில் சொல்லப்பட்டது; இதிலே எந்தவிதமான முறைகேடும் இல்லை.

டாக்டர் ஹாண்டே அவர்கள் எங்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று சொன்னார்கள். அது பேரவைத் தலைவரின் வேலை இல்லை.

4. அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/75).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ் நாடு, 1975-ம ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/75) ஆய்வுக்கு எடுததுக்கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

5. 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள்

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :